மற்றும் கொடையளிக்கும் மக்கள், நலன்புரி சங்கங்கள் மற்றும் நலன்புரி மன்றங்களுடன் நல்லுறவுகளை ஒருங்கிணைத்தலும் மேம்படுத்தலும்;

(ஈ) கருத்துக்கள் மற்றும் அனுபவத்தினை பரிமாற்றுவதற்கு வசதியளிக்கும் நோக்கொன்றுடன் பௌத்த சங்கத்தின் குறிக்கோள்களை ஊக்குவிக்கும் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக அத்தகைய சங்கத்தினால் தேவைப் படுத்தக்கூடிய பௌத்தம் மற்றும் பௌத்த தத்துவங்களின்மேல் எழுதப்பட்ட புத்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சஞ்சிகைகள் என்பனவற்றை அச்சிடுதல், வெளியிடுதல் மற்றும் விநியோகித்தல்;

(உ) அவ்வகையான சங்கத்தின் ஒத்த குறிக்கோள்களையுடைய ஏனைய சமாசங்கங்கள், சங்கங்கள் மற்றும் ஒழுங்கமைப்புகளுடன் ஒத்துழைப்புடன் பணியாற்றுதல்; அத்துடன்

(ஊ) உள்ளார்ந்த அமைதியைத் தேடுகின்ற எல்லா ஆட்களுக்கும் பௌத்த கோட்பாடுகளின் கடைப் பிடித்தலை மேம்படுத்துவதனூடாக உதவி வழங்குதல்.

**4.** கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்கள், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிக்கும், அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் ஒரே நேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே முரண்பாடெதனையும் உருவாக்காத அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் அமைச்சினது அல்லது திணைக்களத் தினது பணியுடன் முரண் பாடில்லாத திருப்பதனைக் கூட்டிணைக்கப் பட்ட குழு உறுதிப்படுத்தல்

